*EVERWIN VIDHYASHRAM*

*STD: IX* L2 - **தமிழ்** *(TERM-II)*

## இயல் - 6: செய்யுள்: நான்மடக் கூடல்

*I.* **பொருள் தருக:**

1. பாவலர் - புலவர்
2. பதி - நகரம்
3. காவியம் - கவிதை நூல்
4. ஆவல் - விருப்பம்
5. போதிச்ச - கற்பித்த
6. பாடசாலை - கல்விக் கூடம்
7. பெருநகரம் - பெரிய நகரம்
8. பண் - பாடல்

*II.* **சிறுவினாக்கள்:**

1. ஏறு தழுவுதல் காளைகளால் - தோள்
ஏறுமே கம்பீரம் மாலைகளால் - இவ்வடிகள் சுட்டும்
வீரவிளையாட்டு பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

* இவ்வடிகள் சுட்டும் வீர விளையாட்டு ஏறு தழுவுதல் ஆகும்.
* தமிழர்கள் வாழ்வோட பின்னிப் பிணைந்த வீர விளையாட்டு ஏறுதழுவுதல்.
* தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு.
* இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு.
* அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.
* காளையை அடக்கும் வீரர்களின் தோள் மேல் மாலையணிந்து சிறப்பு செய்வர்.

2. மதுரை மாநகரின் சிறப்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.

புலவர்கள் பலரால் புகழ்ந்துப்பாடப்பட்டது வையை ஆறு.

பாண்டிய மன்னர்களின் அரசாட்சியை நிலை நிறுத்திய நகரம் மதுரை.

ஓவியங்களால் வரையப்பட்ட அழகு நிறைந்த தெருக்கள் நிறைந்தது மதுரை.

மல்லிகைப் பூவின் நறுமணம் எப்பொழுதும் குடிகொண்டிருக்கும் நகரம் மதுரை.

காவிய நூல்களால் பாடப்பட்ட மதுரை பல விழாக்களால் மக்களை மகிழ்ச்சிப்படுத்தும்.

பெண் குதிரையில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் அற்புதக் காட்சியைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் மதுரை நகரைச் சுற்றி வருவர்.

பாரதியார் கற்பித்த கல்விச்சாலை இங்கு உண்டு.

திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டுள்ள முருகன் வீற்றிருக்கும் பெருமை உடையது.

அழகிய நான்கு கோபுரங்களால் நகருக்கு அழகு சேர்க்கும் மீனாட்சியம்மன் திருக்கோயில் இவற்றால் மதுரை மாநகரம் சிறப்பு பெற்றிருந்தது.

## 2. செய்யுள்: மதுரைக் காஞ்சி

*I.* **பொருள் தருக:**

1. விண் - வான்
2. புரிசை - மதில்
3. அணங்கு - தெய்வம்
4. திண் - வலிமை
5. மாகால் - பெருங்காற்று
6. முந்நீர் - கடல்
7. கயம் - நீர்நிலை
8. ஓவு - ஓவியம்
9. நியமம் - அங்காடி
10. பணை - முரசு

*II.* **சிறுவினா:**

1. மதுரைக்காஞ்சி - குறிப்பு வரைக.

* பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி.
* காஞ்சி என்றால் நிலையாமை என்று பொருள்.
* மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது.
* இந்நூல் 782 அடிகளைக் கொண்டது, அவற்றுள் 364 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதை பெருகு வளமதுரைக்காஞ்சி என்பர்.
* இதன் பாட்டுடைத்தலைவன் தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

*III.* **நெடுவினா:**

1. மதுரை மாநகர் பற்றி மதுரைக்காஞ்சி கூறுவனவற்றை விள்கககுக.

முன்னுரை:

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான மதுரைக்காஞ்சி மதுரைமாநகரின் சிறப்புகளை எடுத்துரைக்கிறது. அச்சிறப்புகளைக் காண்போம்.

அகழி, மதில் சிறப்புகள்:

மதுரை மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது.

வாயில் சிறப்பு:

பழைமையானதும் வலிமைமிக்கதும் தெய்வத் தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய் பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது.

இல்லங்களின் பெருமை:

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு பிரிவுகளைக் கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன.

தெருக்களின் அழகு:

ஆறு போன்ற அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலி போல் ஒலிக்கிறது.

இசையும், ஆரவாரமும்:

இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மைபோல் எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் வணிக வளாகங்கள் ஓவியங்கள் போலக் காட்சியளிக்கின்றன.

முடிவுரை:

பழம்பெருமை வாய்ந்த மதுரை மாநகர் பற்றி பல இலக்கியங்கள் புகழ்பாடுகின்றன. ஆனால் மதுரையின் சிறப்புகளை மட்டும் பாடிய ஒரே நூல் மதுரைக் காஞ்சியாகும்.

### 3. உரைநடை: வணிக வாயில்

*I.* **சிறுவினா:**

1. கொற்கை - சிறு குறிப்புத் தருக.

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கையாகும்.

பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசானா வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிர்வாகம் கற்றனர்.

கொற்கை துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் நடைபெற்றது.

2. முசிறி துறைமுகம் - குறிப்பு வரைக.

* தமிழ்நாட்டின் மேற்குத் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி.
* இது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில் கலங்குமிடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகமாகும்.
* அக்காலத்தில் சேர நாட்டுத் தலைநகரான வஞ்சி, முசிறி துறைமுகப் பட்டினத்திற்கு அருகிலேயே அமைந்திருந்தது.

3. பண்டைய துறைமுகங்கள் பற்றி விவரித்து எழுதுக.

முன்னுரை:

அக்காலத்தில் வணிக நகரங்களாகப்புகழ் பெற்றிருந்த துறைமுகங்கள் தமிழகத்தின் வளத்தையும் நாகரிக முதிர்ச்சியையும் வெளிக்காட்டுகின்றன.பண்டைய துறைமுகங்கள் பற்றியும், அங்கு நடைபெற்ற வணிகம் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

துறைமுகம்:

கப்பல்களும் படகுகளும் வந்து தங்கிச் செல்வதற்குரிய இடம் துறைமுகமாகும். இப்பகுதி கடல் வழிப் போக்குவரத்து நடைபெறும் இடமாக உள்ளது. தமிழகத்தின் துறைமுகங்கள் ஆற்றின் கழிமுகங்களில் அமைந்திருந்தன.

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்:

விலை உயர்ந்த நறுமணப் பொருட்கள், விலை உயர்ந்த கற்கள், வைரம், முத்து, நீலமணி, தந்தம், சீனப்பட்டு, ஆமை ஓடுகள் போன்றவை முசிறி துறை முகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.

இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்:

பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலிய பொருட்கள் யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்டன.

அகநானூறு தரும் செய்திகள்:

கொற்கைக் குடாக்கடலில் முத்துச்சிப்பிகளும், சங்குகளும் உண்டாயின.

செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்குக் கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்தன. இச்செய்தியை அகநானூறு பாடல் 130 கூறுகிறது.

முத்துக் குளிப்பது மட்டுமின்றி வலம் புரிச்சங்கு எடுக்கவும் அங்குள்ள ஆடவர் கடலில் மூழ்குவர் என்னும் செய்தியை ‘வலம் புரி மூழ்கிய வான் திமில் பரதவர்’ என அகநானூற்றின் 350 ஆம் பாடல் சுட்டுகிறது.

சங்ககாலம் முதல் பிற்காலப் பாண்டியர் காலம் வரை பாண்டிய நாட்டு முத்துகளை உரோம் நகரத்தினர் விரும்பி வாங்கியுள்ளனர்.

முடிவுரை:

யாதும் ஊரே யாவரும் கேளீர் என உலக மாந்தரின் உறவை விரும்பியவர்கள் தமிழர்கள். முசிறி, கொற்கை, காவிரிப்பூம்பட்டினம் துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் நடைபெற்றது.

தமிழர்கள் கடல் வணிகத்தின் மூலம் ஆழிசூழ் நிலவுலகை மட்டுமின்றி ஆழியையும் தம் ஆளுகையில் பல நூற்றாண்டுகளாக வைத்திருந்தார்கள் என்பதற்கு இத்துறைமுகங்கள் சான்று பகர்கின்றன.

### 4. செய்யுள் - திருக்குறள்

*I.* **பொருள் தருக:**

| | | |
|---|---|---|
| 1. இகல் | - | துன்பம் |
| 2. குன்றுதல் | - | குறைதல் |
| 3. நாண் | - | வெட்கம் |
| 4. ஒப்பறவு | - | இரக்கம் |
| 5. கண்ணோட்டம் | - | கனிவு |
| 6. வாய்மை | - | உண்மை |
| 7. ஆற்றுவார் | - | ஆற்றல் புரிவார் |
| 8. ஆற்றல் | - | வலிமை |
| 9. பணிதல் | - | பகைவர் |

10. மாற்றார் - பகைவர்
11. ஆழி - கடல்
12. உழ்ந்தும் - துன்கப்பட்டும்

*II.* **சிறுவினாக்கள்:**

1. புல்லறிவாண்மை என்னும் தலைப்பில் வள்ளுவம் உரைப்பன யாவை?

* சொன்னாலும் செய்யாமல் தானாகத் தெரிந்தும் செய்யாமல் இருப்பவனுடைய உயிர் போகுமட்டும் நோய் போன்றவன்.
* அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்ல முயல்பவன் தானே அறிவில்லாதவனாய் மாறி விடுவான். அறிவல்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவனாய்த் தோன்றுவான்.

2. சான்றாண்மையைப் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?

* பிறர்க்கு அன்பும், பழிக்கு நாணுதலும், அனைவரிடமும் இணக்கமும், கண்ணில் கனிவும் உண்மையுடனிருத்தலும் ஆகிய ஐந்து பண்புகளும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாகும்.
* செயல் செய்பவரின் ஆற்றலானது பணிவுடன் நடத்தலாகும். அதுவே சான்றோர்க்குப் பகைவரையும் நண்பராகச் செய்யும் கருவியாகும்.
* சான்றாண்மை என்னும் கரைக்குக் கடல் போன்றவர்கள் ஊழிக்காலம் வந்தாலும் தம் நிலையிலிருந்து தவறமாட்டார்கள்.

3. உழவின் மேன்மையை குறள் வழி விளக்குக.

* எந்தத் தொழிலைச் செய்ய விரும்பி சூழன்று அலைந்தாலும் உலகம் ஏருக்குப் பின்னாலேயே போகும். அதனால் வருந்தி உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.
* சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
  உழந்தும் உழவே தலை.
* பிற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கிப் பிடிப்பதால் அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.

5. துணைப்பாடம் - சந்தை

*I.* **சிறுவினாக்கள்: பாடநூல் வினா:**

1. சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்குமான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

சந்தை:

* கிராமத்து மக்கள் தங்களுடைய நிலத்தில் விளையும் காய்கறி, கீரை, தானியம் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பி மக்கள் கூடம் இடங்களில் கடை வைத்து வணிகம் செய்வது சந்தை என்ற பொது வணிக இடமாகும். கலப்படம் இல்லாத நேர்மைதான் சந்தையோட, அடிப்படை.

சந்தையில் உற்பத்தியாளன்தான் விற்பனையாளர். பெரும்பாலும் இடைத்தரகர்களுக்கு வேலை இல்லை. குளிரூட்டப்பட்ட அறை இல்லை. வாடகை இல்லை விற்கிறவனும் வாங்கிறவனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் அது தான் பொருளோட விலை. வாங்க வாங்க என ஏதா கல்யாண வீடு போல நலம் விசாரித்து பிறகு தான் சந்தையில் வியாபாரம் நடக்கும்.

பல்பொருள் அங்காடி:

* ஒரே கட்டத்துள் கடைகள், திரைப்பட அரங்கு, உணவகம், கேளிக்கை அரக்குகள் எல்லாமே இருக்கும். குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்தில் வாங்கக் கூடிய இடம் பல்பொருள் அங்காடி ஆகும். யார் யாருக்கு எது வேண்டுமோ அததுக்குத் தனித்தனியான பகுதிகள் இருக்கும். தேவைக்கு அளவுக்கும் ஏற்பப்பொருள்களை நாமே தேர்ந்தெடுக்கலாம். முற்றிலும் குளிரூட்டப்பட்ட அறைகள்.

*II.* **நெடுவினா:**

1. எங்கள் ஊர்ச் சந்தை என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

* எங்கள் ஊர் ஆண்டிபட்டி, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்திற்கு அருகில் உள்ளது. ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை சந்தை நடைபெறும்.
* திங்கள் இரவே பொருள்கள் வாகனங்களில் வந்து குவியும், பரந்த நிலப்பரப்பில் 400க்கும் மேற்பட்ட சிறு சிறு கடைகளில் பொருள்களை விற்பர். வீதியின் இரு புறங்களிலும் சில்லரை வியாபாரிகள் பொருள்களை பரப்பி விற்பர்.
* காய்கறிகள் தோட்டத்திலிருந்து தற்போது தான் பறித்து வந்துள்ளார்களோ என ஐயப்படுமளவுக்கு பளபளப்பாக இருக்கும்.
* கீரைவகைகள் எல்லாம் தளதளவென வளர்ந்து பச்சைப்பசேல் என கட்டுகட்டாகக் கட்டப்பட்டு கடைவீதியில் கிடைக்கும்.
* வாழைப்பழங்கள் தார்தாராக வண்டியில் ஏற்றப்பட்டு தயாராக நிற்கும். காலையில் மெதுவாக தொடங்குகிற பழவியாபாரம் மாலையில் வேகமாக சூடு பிடிக்கும். வாழைப் பழங்களைக் குலை குலையாக எடுத்து ஏலம் விடுவர். அதைக் குறைந்த விலைக்கு ஏலம் எடுக்கவே நிறைய மக்கள் போட்டியிடுவர் வணிகர்கள் நஷ்டமாகாதவாறு வாழைக்குலைகளை ஏலம் விடுவர். சில சமயங்களில் அசல் பணம் கிடைத்தாலே போதுமென்ற வாழைப்பழங்களை எல்லாம் விற்றுவிட்டே சென்று விடுவர்.
* பயறுவகைகள், தானிய வகைகள், பழ வகைகள், தேங்காய் மற்றும் பல சரக்கு வகைகள் தரமானமாகவும் விலை மலிவாகவும் கிடைக்கும். துணிமணிகளும் விற்பனைக்குத் தயாராக இருக்கும். கிராமத்திலிருந்து வருகின்ற மக்கள், அந்த வாரத்திற்குத் தேவையானவற்றை மகிழச்சியோடு வாங்கிச் செல்வர். நீங்களும் வருகை தாருங்கள் ஆண்டிமடம் சந்தை உங்களை அன்புடன் அழைக்கிறது.

6. இலக்கணம்: ஆகுபெயர்

Refer the Text Book. Pg. No 170 – 171.